உமறுப்புலவர்
தமிழ்மொழி நிலையம்
UMAR PULAVAR TAMIL LANGUAGE CENTRE




# பயணம்

மாணவர் இதழ்

**மே 2017**


**தொடர்புக்கு:**

✍ 2, பீட்டி சாலை,
சிங்கப்பூர் 209954

✆ 62980781

**இணையப் பக்கம்:**
www.uptlc.moe.edu.sg


**2017-ஆம் கல்வியாண்டுக்கான விவரங்கள்**

புதிது

பார்க்க:
**இணையப் பக்கம்**

## உள்ளே...


| உள்ளே... | பக்கம் |
|---|---|
| அன்னையர் தினம் | 1 |
| அழகுதமிழ் அறிவோம்! | 1 |
| மேதின நல்வாழ்த்துகள்! | 1 |
| முக்கிய நிகழ்வுகள் | 1 |
| மாதிரிக் கட்டுரை | 2 |
| அன்பு அம்மா - கவிதைகள் | 2 |
| மனிதனை நேசிப்போம் | 3 |
| பிழைமொழி VS பழமொழி | 3 |
| பரம்பரை பரம்பரையாக | 3 |
| உழைப்பின் உயர்வு (கதை) | 3 |
| கைத்தொலைபேசி (கவிதை) | 3 |


## முக்கிய நிகழ்வுகள்

- **Paper Viewing**
  *மே 2 - 5*
- **Parent Teacher Meet**
  *மே 8 - 12*
- **HTL Camp**
  *மே 20*
- **Library Week**
  *மே 22 - 26*

## அன்னையர் தினம்

உலகில் அன்னையின் பாசத்திற்கு ஈடு இணை ஏதுமில்லை. அன்னைதான் நம் முதல் தெய்வம். நம்மை உலகுக்கு அடையாளம் காட்டியவர் அன்னை மட்டுமே. முதுமைக் காலத்திலும் அன்னையரை அன்போடு நடத்த வேண்டும் என்பதை உணர்த்தும் விதமாக ஆண்டுதோறும் மே 2வது ஞாயிற்றுக் கிழமையை நாம் உலக அன்னையர் தினமாகக் கொண்டாடி வருகிறோம்.

கிரீசில், 'ரியா' என்ற கடவுளைத் தாயாகக் கருதி வழிபாடு நடத்தப்பட்டது. ரோமிலும் 'சிபெல்லா' என்ற பெண் கடவுளை அன்னையாகத் தொழுதனர். இன்றைய அன்னையர் தினம் நேரடியாகத் தாய்மார்களை குறிக்கும் வகையில் கொண்டாடப்படுகிறது. இப்போது கொண்டாடப்படும் அன்னையர் தினம் முதன் முதலில் அமெரிக்காவின் மேற்கு வர்ஜீனியாவின், கிராம்ப்டன் நகரில் 1908ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. அமெரிக்காவைப் பின்பற்றி இந்தியா, ஜெர்மனி உள்ளிட்ட 70க்கும் மேற்பட்ட நாடுகள், மே 2வது ஞாயிறு அன்று இத்தினத்தைக் கொண்டாடுகின்றன. சிறந்த சமுதாயத்தை உருவாக்க, அன்னையரின் பங்களிப்பு முக்கியம். 'எந்தக் குழந்தையும், நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, பின்பு, நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே' என்ற பாடல் வரிக்கு ஏற்ப, சமுதாயத்துக்கு நல்ல மனிதர்களை உருவாக்கித் தருபவர் அன்னை தான். இந்த அன்னையர் தினத்தில் நம் அன்னையரைப் போற்றுவோம்! அவர்கள் செய்த தியாகத்தை நினைவுகூர்வோம்! |

*இப்படிக்கு...*
**இதழ்க் குழு**




## படிப்பது எப்படி?

**ஒரு பாடத்திற்கு ஒரு மணி நேரம் ஒதுக்கிப் படிக்கவும்.**

**படிக்கும்போது இடையிடையே ஓய்வு எடுத்துக்கொள்வது நல்லது.**

**பாடக் கருத்துளை எளிய குறிப்புகளாகவோ, மனவரைபடமாகவோ தயாரிக்கவும்.**

தொடரும்...

## அழகுதமிழ் அறிவோம்!

**CYBER WORLD**
**இணைய உலகம்**
**TECHNOLOGY**
**தொழில்நுட்பம்**

**மாணவர்களின் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.**

## மேதின நல்வாழ்த்துகள்!

**உழைப்பாளர் வாழ்வுக்கு**
**ஒளிதரும் ஒரு தினம் - மேதினம்!**
**தொழிளாளர் நலம் பேணும்..**
**வளம் பேணும்.. நல்தினம் - மேதினம்**
**நாளெல்லாம் உழைத்திருக்கும்**
**நன்மக்கள் உழைப்பாளிகள்! - அவர்**
**நலம் வாழ.. நாம் முயல்வோம்..**
**நாளெல்லாம் புகழ் பாடுவோம்!**
**தொழிலாளர் நலன் காக்கும்**
**தொழில்கள் பல கண்டிடுவோம்!**
**தூயவராம் அவர் வாழ்வின்**
**துயரங்கள் போக்கிடுவோம்!**




**'பயணம்' மாணவர் இதழ் தயாரிக்கும் குழுவில் பணியாற்றுவதற்கு ஆர்வமுள்ள மாணவர்கள் வரவேற்கப்படுகின்றனர்.**

## மாதிரிக் கட்டுரை

### இன்றைய இளையர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும்

'இளையர்கள் எதிர்காலத் தூண்கள்' என்பார்கள். எதிர்கால உலகின் தலைவர்களாக வலம்வரக் கூடிய தகுதியும் திறனும் பெற்றவர்கள் நம் இளையர்கள். நாட்டின் முதுகெலும்பாய்த் திகழக்கூடிய இவ்விளையர்கள் இன்றைய நவீன வாழ்க்கைச் சூழலில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஏராளம். அவை என்னென்ன என்பதைப் பற்றியும் அவற்றைக் களைவதற்கான வழிமுறைகளைப் பற்றியும் இக்கட்டுரை விளக்கும்.

இளமை என்பது துடிப்புமிக்க பருவம். அப்பருவத்தில் துள்ளலும் வேகமும் அதிகம் இருக்கும். இந்தத் துடிப்பான பருவத்தை வழிநடத்தும் பொறுப்புமிக்கவர்கள் நம் பெற்றோர்கள். பெற்றோர்களின் தலையீடு இளையர்களிடம் தலைகாட்டும்போது பிரச்சினைகள் எழுகின்றன. தலைமுறை இடைவெளி என்னும் சிக்கலால் இருவரும் வேறுபட்டு நிற்கின்றனர். இன்றைய காலகட்டத்தில் பதின்ம வயதினர்களுக்கு ஏற்படும் மிகப் பெரிய பிரச்சனை, அவர்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் நடுவே இருக்கும் புரிந்துணர்வு இல்லாத மனப்போக்குத்தான்.

இளைஞர்கள், தங்களின் பெற்றோர்கள் அவர்களைவிடப் பல மடங்கு அனுபவம் வாய்ந்தவர்கள், என்பதை அறிவதில்லை. பெற்றோர்கள்தாம் பிள்ளைகளுக்குக் கலங்கரை விளக்கம்போலத் திகழ்வர். இளைஞர்கள் தங்கள் வாழ்வில் நடக்கிற எல்லாவற்றையும் பெற்றோர்களிடம் பகிர்ந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் பெற்றோர்களால் அறிவுரை கூறி வழிநடத்த இயலும். அதுமட்டுமல்லாமல் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டால் பிரச்சனைகளை எளிதாகக் களைய இயலும்.



இளைஞர்களுக்கு நண்பர்களாலும் பிரச்சினைகள் எழுகின்றன. நாம் வாழ்கையில் நிறைய நண்பர்களைக் கடந்து வருகிறோம். அவர்கள் எல்லோரும் நல்ல நண்பர்களாக இருப்பர் என்று கூற முடியாது. பாலையும் நீரையும் பிரித்து அருந்தும் அன்னப் பறவையைப்போல் இளைஞர்கள் செயல்படுவது அவசியம். தீயநண்பர்களை விடுத்து நல்லவர்களை நட்பாகக் கொண்டால் பிரச்சினைகள் எழா. எனவே, நற்பண்புகளையுடைய நண்பர்களின் நட்பைக் கைகொள்வது நல்லது. 'அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்' என்ற பழமொழிக்கேற்ப நம் துன்பங்களில் தோள்கொடுத்து நம்மைச் சரியான வழியில் இட்டுச்செல்லும் நண்பர்களை நாம் தேர்ந்தெடுக்கவேண்டும்.

இன்றைய இளையர்கள் எதிர்நோக்கும் பெரும் பிரச்சினை தொழில்நுட்பத்திற்கு அடிமையாகும் தன்மை ஆகும். இளைஞர்கள் கல்வியில் கவனம் செலுத்தாமல் கைத்தொலைபேசி, கணினி, தொலைக்காட்சி போன்ற ஊடங்களில் கவனத்தைச் செலுத்துகிறார்கள். இதனால் கல்வியில் பின்தங்கும் நிலை ஏற்படுகிறது. சமூக ஊடகங்களின் தாக்கத்தால் பலர் தீயபழக்கங்களிலும் ஈடுபடுகின்றனர். 'காலம் பொன் போன்றது' என்பதை மறந்து வாழ்கின்றனர். இதனால் இளையர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக மாறிவிடுகின்றது. 'மூத்தோர் சொல் வார்த்தை அமிழ்தம்' என்பதை உணராது செயல்படுகின்றனர். சுயகட்டுப்பாட்டோடு இளைஞர்கள் நடந்துகொண்டால்தான் அவர்களின் எதிர்காலம் வசந்தகாலமாக மாறும். கல்வியில் கருத்தைச் செலுத்தி நற்பண்புகளுடன் வலம்வருவது அவர்களின் முன்னேற்றத்திற்கு வித்திடும்.

எதிர்கால உலகில் திறவுகோளான இளைஞர்கள், பெற்றோர் சொற்கேட்டு நடப்பதோடு, நல்ல நண்பர்களையும் துணையாகக்கொண்டு நடைபோட வேண்டும். 'கல்வி கண் போன்றது' என்பதைக் கருத்திற்கொண்டு செயல்படுவதோடு, தொழில்நுட்ப வளங்களைத் தன்னுடைய முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தினால் பிரச்சினைகளைக் கடந்து வாழ்வில் உயரமுடியும். அப்போதுதான் இளையர்கள் நற்குடிமக்களாக வலம்வருவார்கள். இத்தகையவர்களால்தான் சமூகமும் நாடும் உயர்நிலை எய்தும் என்பது வெள்ளிடைமலை.

**சென்சியா (2HT1)**

## அன்பு அம்மா!

நான் பார்த்த முதல் முகம்
நான் பேசிய முதல் வார்த்தை
நான் சிரித்த முதல் கணம்
எல்லாம் நீ தான்!
என் இதயமும் நீ தான்!

**காயத்ரி 2HT1**

நான் எடுத்துவைத்த முதலடி
உன்னாலே!
நான் பேசிய முதல் வார்த்தை
உன்னாலே!
நான் அழுத முதல் காரணமும்
உன்னாலே!
நான் கற்றதும் உன்னாலே!
நான் பெற்றதும் உன்னாலே!
உன்னால் நான் உயர்வேன்
உனக்காக நான் வாழ்வேன்!

**இன்பா 2HT1**

பாசத்துடன் படிகுவார் அம்மா!
அன்புடன் அணைப்பார் அம்மா!
பிறருக்கு உதவுவார் அம்மா!
பிழை செய்தால் தண்டிப்பார்
அம்மா!
கஷ்டத்திலும் சிரிப்பார் அம்மா!
கடுமையாக உழைப்பார் அம்மா!
அம்மா என் தெய்வம்!
அவரே என் இதயம்

**ரிப்சியா 2HT1**

பாசத்தைக் கொட்டுவாள்!
பண்பாக நடப்பாள்!
எனக்காக எல்லாமும் கொடுப்பாள்!
எப்போதும் என்னையே
நினைப்பாள்!
உயிரைக் காக்கும் உறவு அவள்!
உணர்வில் கலந்த அதிசயமும்
அவள்!

**ஆனிசஃரின் 2HT1**

சிறு வயதிலிருந்து வளர்த்தவர்
செல்லமாய்க் கொஞ்சி வளர்த்தவர்
ஆபத்திலிருந்து காத்தவர்
அருகிருந்து வளர்ப்பவர்
நான் காணாத கடவுளும் அவர்
நாளும் அறிந்த ஞானியும் அவர்!
அவரே என் தாய்!

**வித்யாதர் 2HT1**

அன்பைப் பொழிகின்றவர்-என் அம்மா
ஆதரவைத் தருகின்றவர் - என் அம்மா
இரக்கம் காட்டுபவர் - என் அம்மா
ஈகை குணமுடையவர் - என் அம்மா
உயிர்போல் காப்பவர் - என் அம்மா
ஊக்கம் கொடுப்பவர் - என் அம்மா
எண்ணத்தில் தூய்மையானவர்-என் அம்மா
ஏழ்மையிலும் தாழாதவர் - என் அம்மா
ஐயத்தை நீக்குபவர் - என் அம்மா
ஒழுக்கத்தில் உயர்ந்தவர் - என் அம்மா
ஓவியம்போல் அழகானவர் - என் அம்மா
அம்மா இன்றி நானில்லை
அம்மா இன்றி உலகில்லை!

**காருண்யா கிறிஸ்டி 2HT1**

கஷ்டங்களையும் சவால்களையும்
தாண்டி வந்தாய்!
கண்மணியாய் என்னை ஈன்றாய்!
நான் செய்யும் குறும்புகளை
நாளும் நீ பொறுத்துக்கொண்டாய்!
போராட்டமே வாழ்க்கை என்றாய்
போராடியே வெற்றி கண்டாய்!
தவறுகளைச் சரிசெய்தாய்
துக்கத்தில் தோள் கொடுத்தாய்
தூயவளாய் வளம் வந்தாய்
தாயான என் தெய்வம் நீ!

**லோசினி 2HT1**

நீ கடலென்றால்
நான் அதில் நீந்தும் மீன்
நீ மரமென்றால்
நான் அதிலொரு இலை
நீ பூமியென்றால் - நான்
உன்னைப் பாழாக்கும் மனிதன்
எனக்கு உயிர்ப்பிச்சையளித்த தாயே!
என்னையே உயிராய்
எப்போதும் இமையாய் காக்கும்
நீயே என் தெய்வம்!

**குழலி 4HT2**

## மனிதனை நேசிப்போம்!

ஒரு அப்பாவும் அவரது நான்கு வயது மகனும் அவர்களுடைய புதிய காரைத் துடைத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது மகன் ஒரு சிறிய கல்லை எடுத்துக் காரின் கதவில் ஏதோ சுரண்டிக் கொண்டிருந்தான். சத்தத்தைக் கேட்ட அப்பாவுக்குக் கோபம் தலைகேறியது...

அப்பா, கோபத்தில் மகனுடைய கையைப் பிடித்து, நான்கு தடவை மகனது உள்ளங்கையில் அடித்துவிட்டார். மகனது கையிலிருந்து இரத்தம் வழிந்தோடியது. அப்பொழுதுதான் கவனித்தார் அவர் அடித்தது 'சுத்தியலைக்' கொண்டு என்பதை.

வலியில் துடித்த மகனை மருத்துவமனைக்குத் தூக்கிகொண்டு ஓடினார். பல எலும்புகள் முறிந்துவிட்டதால்.. இனி விரல்களைக் குணமாக்க முடியாது என்று மருத்துவர்கள் கைவிரித்து விட்டனர்.

மகன் கண்ணீர் பெருக்கெடுத்த கண்களுடன்.. அப்பாவைப் பார்த்து "அப்பா.. என்னோட விரல்கள் திரும்ப வளர்ந்துவிடும் தானே அப்பா?" என்று கேட்டவுடன், அவர் கண்களில் கண்ணீர் மல்க மௌனமாக வெளியே வந்தார்.

வெளியில் நின்றிருந்த காரைப் பல தடவை எட்டி, எட்டி உதைத்தார். தலையில் கையை வைத்துக்கொண்டு, கண்ணீருடன் காரின் முன்பு உக்கார்ந்து அழுதார்! தந்தை.

அப்பொழுதுதான் அந்தக் கீறல்கள் அவர் கண்ணில் பட்டன. என்ன எழுதியிருக்கிறது என்று அவர் உற்றுக் கவனித்தார். "ஐ லவ் யூ அப்பா" என்ற அந்த வாசகம் அவரை என்னவோ செய்தது.

இன்று நாம் மனிதர்களை வெறுக்கிறோம்!
பொருட்களை நேசிக்கிறோம்...
எப்பொழுதுதான் மனிதனை நேசித்துப் பொருட்களைப் பயன்படுத்தப் போகின்றோமோ?

நன்றி: www.yarl.com

## பிழைமொழி VS பழமொழி

படிச்சவன் பாட்டைக் கெடுத்தான்
எழுதுனவன் ஏட்டைக் கெடுத்தான் ✗

படித்தவன் பாட்டைக் கொடுத்தான்
எழுதியவன் ஏட்டைக் கொடுத்தான் ✓

## விரும்புவதில்லை...

**இறப்பு**
**எல்லோருக்கும் வந்தே தீரும்**
**ஆனால் யாரும்**
**இறக்க விரும்புவதில்லை!**

**உணவு**
**எல்லோருக்கும் வேண்டும்**
**ஆனால் யாரும்**
**பயிர்செய்ய விரும்புவதில்லை!**

**தண்ணீர்**
**எல்லோருக்கும் வேண்டும்**
**ஆனால் யாரும் - அதைச்**
**சேமிக்க விரும்புவதில்லை!**

**நிழல்**
**எல்லோருக்கும் வேண்டும்**
**ஆனால் யாரும்**
**மரம் வளர்க்க விரும்புவதில்லை!**

## பரம்பரை பரம்பரையாக!

முதல் தலைமுறை – நாம்
இரண்டாம் தலைமுறை – தாய், தந்தை
மூன்றாம் தலைமுறை – பாட்டன், பாட்டி
நான்காம் தலைமுறை – பூட்டன், பூட்டி
ஐந்தாம் தலைமுறை – ஓட்டன், ஓட்டி
ஆறாம் தலைமுறை – சேயோன், சேயோள்
ஏழாம் தலைமுறை – பரன், பரை

ஒரு தலைமுறை என்பது **60** ஆண்டுகள். பரம்பரை என்பது **480** ஆண்டுகள். **பரம்பரை பரம்பரையாக** என்பது பதினான்கு தலைமுறையைக் குறிக்கும். **960** வருடங்கள் அதாவது சுமாராக 1000 ஆண்டுகள்.

## உழைப்பின் உயர்வு...

சிறுவூர் என்ற கிராமத்தில் முத்தப்பன், வேலப்பன் என்ற இரு நண்பர்கள் வசித்து வந்தனர். முத்தப்பன் நல்ல உழைப்பாளி! ஆனால், வேலப்பன் ஒரு முழுச் சோம்பேறி! அவன் உண்பதும் உறங்குவதுமாய்ப் பொழுதைக் கழித்து வந்தான்.

அவர்கள் இருவருக்கும் சமஅளவில் நிலங்கள் இருந்தன. முத்தப்பன் தன் நிலத்தில் நெல் விதைத்து நீர்பாய்ச்சிக் களையெடுத்துப் பாடுபட்டான். அவனது உழைப்பின் பயனாக வயலில் விளைச்சல் மிகுந்தது. நன்கு பாடுபட்ட முத்தப்பன் தன்னிடமிருந்த இரண்டு ஏக்கர் நிலத்தை ஐந்து ஏக்கராக மாற்றினான். அதே சமயம் வேலப்பன் தன்னிடமிருந்த சிறு நிலத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக விற்றுக்கொண்டிருந்தான்.

ஒரு நாள் வேலப்பன் இதைப் பற்றி முத்தப்பனிடம் பேசினான். "நண்பா நீயும் நானும் சம அளவு நிலத்தை தான் வைத்திருந்தோம் இன்றோ நீ ஐந்து ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரனாகி விட்டாய். நானோ இருந்த நிலத்தையும் இழந்து கடன்காரனாக நிற்கிறேன். உனக்கு அதிர்ஷ்டம் அதிகமாக உள்ளது. நானோ துரதிருஷ்டசாலி!" என்று வருத்தத்துடன் கூறினான்.

முத்தப்பனோ! "நண்பா நான் ஐந்து ஏக்கர் நிலம் வாங்கியதற்குக் காரணம் அதிர்ஷ்டம் இல்லை! அயராத உழைப்புத்தான் என்பதை நீ உணர்ந்துகொள். நீ உன் நிலத்தில் இறங்கி ஒரு நாளேனும் வேலை செய்தாயா? எல்லாவற்றிற்கும் வேலைக்காரர்களை நம்பினாய்! அதுமட்டுமல்லாமல், அவர்கள் ஒழுங்காக வேலை செய்கிறார்களா? என்று கண்காணிக்கக்கூட சோம்பல் பட்டாய்!. எனவே நீயும் வியர்வை சிந்தி உழைத்தால் மண்ணும் பொன்னாகும் என்பதை மறந்துவிடாதே! என்றான்.

வேலப்பனுக்குத் தன் தவறு புரிந்தது! உழைப்பின் அருமையை உணர்ந்தான். அன்றுமுதல் வயலில் இறங்கி வேலை செய்யத் தொடங்கினான். முத்தப்பனைப்போல் சந்தோசமாகவும் வாழ்ந்தான்.

**உழைப்பே உயர்வு தரும்!**

## கைத்தொலைபேசி

**வீட்டைவிட்டு வெளியேறி**
**விளையாடியது அந்தக்காலம்!**
**பெற்றோர் கெஞ்சி**
**வெளியே வருவது**
**இந்தக் காலம்!**



**உலக வரைபடத்தில்**
**நாடுகளைக் கண்டது**
**அந்தக்காலம்!**
**உலகத்தையே சட்டைப்பைக்குள்**
**சுருக்கிக்கொண்டது இந்தக் காலம்!**
**பணத்தை வைத்துப்**
**பாடங்கற்றது அந்தக் காலம்**
**ஊடகத்தைப் பயன்படுத்தி**
**உலகம் கற்பது இந்தக் காலம்!**
**தொழில்நுட்ப வளர்ச்சியின்**
**தொலைபேசி அதிசயம்**
**நம் கையில் குழந்தையாய்!**

குழலி 4HT2




**ஒவ்வொரு துளி நீரையும் மதியுங்கள்! – அது விண்ணிலிருந்து வந்தாலும்... கண்ணிலிருந்து வந்தாலும்!**